**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அப்படியில்லை. அப்படி நினைக்க வேண்டாம். நானே கூட கார் வைத்திருக்கிறேன். I have got a profession.

**திரு. முனு ஆதி:** இதோடு சேர்த்து ஒன்று. நாம் எல்லோரும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு ஓரளவு திருப்தி அடைகிறோம். ஒருசாரார் வேதனைப்படுவார்கள் என்று நினைக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பத்திரிகையாளர். பத்திரிகையாளர்கள், அதுவும் பத்து ஆண்டுகள் குறிப்பு எடுக்கிறார்கள் என்றால் அவர்களுக்கும் டோக்களுக ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யுங்களேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** வயது வரம்பு பற்றிச் சொல்வேன். முதல் அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதைப் பற்றிக் கவலையில்லை. இப்படிக் கொடுக்கும்போது இப்போது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவ மனைகளில் சலுகைகள் இருக்கின்றன. அந்தச் சலுகைகளை பின்னால் பென்ஷன் வாங்குகிறவர்களுக்கும் நீடிக்கவேண்டும். அது பலருக்கும் அப்போது பயன்படும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கரும்பே வேண்டாமென்று சொல்லிவிட்டு கொஞ்சம் சர்க்கரை யோடு சேர்த்துக்கொடுங்கள் என்பதைப்போல் நம்முடைய நண்பர் சீனிவாசன் அவர்கள், தான் முதலிலே பேசிய வார்த்தை களுக்கு புதுக் கருத்துக்களை இணைத்து இங்கு எடுத்துச் சொன்னார்கள்.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் பல உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். நண்பர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் இதை கட்சியினுடைய கருத்துக்களாக இல்லாமல் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய நிலைமைக்கேற்றவாறு சில எண்ணங்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள் என்றாலும் மாண்பமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் பொதுமக்கள் நம்மைப் பற்றித் தவறாகக் கருதுவார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். உள்ளபடியே கூழுக்கும் ஆசை

மீசைக்கும் ஆசை என்பதைப் போல் இந்த விஷயத்தில் ஆளும் கட்சியை காட்டிக் கொடுத்துவிட்டுப் போய் விடலாம் என்பதற்காக எதிர்வாதங்கள் புரிவது அவ்வளவு நல்லதல்ல.

ரயில்வே பாஸ் போன்றவைகளால் கூட பொது மக்களிடத்தில் நாம் அதிருப்திக்கு ஆளாகியிருக்கிறோம் என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்களேதான் துணை மானியக் கோரிக்கையை இந்த அவையில் நாம் விவாதித்தபோது அந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது கொடுத்த ஒரு வெட்டுப் பிரேரணையில், தங்கமணி அவர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணை ரயில்வே பாஸ் கொடுப்பதில் தாமதம் என்பதைச் சுட்டிக்காட்ட என்ற ஒரு வெட்டுத் தீர்மானத்தை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆக ரெயில்வே பாஸ் கொடுப்பது தவறு அல்ல, கொடுப்பதில் இவ்வளவு தாமதமாயிற்றே, தாமதமாகியதே கூட தவறு என்று சுட்டிக்காட்டுகிற சூழ்நிலையில் கே. டி. கே. தங்கமணி அவர்கள் எல்லாம் மிக முனைப்பாக இருந்துவிட்டு இப்போது இந்தப் பென்ஷன் திட்டத்தைப் பற்றி பொதுமக்கள் ஏதாவது சொல்வார்களானால் அப்போது அவர்களுக்குப் பதில் சொல்வதற்காக இங்கே சில கருத்துக்களைப் பதிய வைப்பது ஆளும் கட்சியை சங்கடத்தில் ஆழ்த்துகிற ஒன்றாக ஆகிவிடும். ஆளும் கட்சி வேண்டுமென்று—இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று முதலில் ஆளும் கட்சி சார்பாக இந்த முடிவு வெளிப்படவில்லை. திருக்குறளில்,

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு,"

என்பதைப்போல் நான் ஒரு புதிய குறளைச் செய்திருக்கிறேன். அங்கத்தினர் ஓய்வூதியமெல்லாம் ஆதி சபையில் மொழிந்த பிறகு. அவர் தான் முதன்முதலாகச் சொன்னார்கள். இந்த ஓய்வூதியம் தரப்பட வேண்டுமென்று. அந்தக் கருத்தை நானும், அவை முன்னவர் நாவலர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும் கலந்து பேசி ஒரு வடிவு அமைக்கப்பட்டது. அந்த வடிவம் அமைக்கப்பட்டதும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் என்னைச் சந்தித்தார்கள். அந்த

வடிவத்தை மாற்ற வேண்டுமென்று வடிவேல் தலைமையில், ஊராண்டே அவர்களும், கிட்டப்பா அவர்களும் என்னைச் சந்தித்து, அதை 10 ஆண்டுகளாக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

இங்கே பதவியில், பொறுப்பேற்று இருக்கின்ற ஒரு சிலர் மாத்திரம் அல்ல, ஏற்கனவே 52 இல், 57 இல் பதவியில் இருந்து இன்று மீண்டும், பொறுப்புக்கு வர முடியாமல், வெற்றி பெற முடியாமல், அல்லது போட்டியிடாமல் இருக்கின்ற, தங்களைப் பொதுப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்ட பல பெரியவர்களுக்கு இதன் மூலமாக பெருத்த நன்மை கிடைக்கிறது என்று என்னால் சொல்ல முடியும்.

இன்று காலை கூட தென்காசியிலிருந்து சங்கரநாராயணன் பிள்ளை எம். ஏ. பி. எல்., எக்ஸ் எம். எல். சி. அவர்கள் கூட எழுதியிருக்கிறார். 12 வருஷம் பொறுப்பில் இருந்தால், அவர் பெற முடியும் என்றாலும், 12 ஆண்டுகள் என்பதை 10 ஆண்டுகளாக எம். எல். ஏ. க்களுக்கு மாற்ற வேண்டுமென்று கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

ஆக, வெளியில் இருக்கிறவர்கள் கூட, பதவிப் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்று இருக்கிறவர்கள் கூட இப்படிப்பட்ட முறை வரவேண்டும், அது 10 ஆண்டுக் காலம் என்ற அளவில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்றால், பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியது போல, அவர்கள் தங்களுடைய வருங்காலத்தில், ஓய்வு காலத்தில் தங்களுடைய குடும்பத்தை ஓரளவிற்கு நடத்திச் செல்வதற்கு அந்தத் தொகை பயன்படும் என்பதால் தான்.

வசதி படைத்தவர்கள், வருமான வரி கட்டுகிறவர்களுக்கு இது தேவையில்லை என்ற கருத்தை நம்முடைய கோவை செழியன் எடுத்துச் சொன்னார்கள். அதற்கும் நம்முடைய சட்டத்தில் இடம் இருக்கிறது. தேவையில்லை என்றால் இந்த ஓய்வூதியத்தை மாத்திரம் அல்ல, இப்போது வாங்கும் சம்பளத்தைக் கூட. வேண்டாம் என்று அரசாங்கத்திற்கே திருப்பிக் கொடுத்து விடலாம் அல்லது அந்தப் பணத்தை வாங்கி வேறு நல்ல காரியத்திற்கு, ஒரு அறக்கட்டளைக்கு, ஒரு பள்ளிக்கூடத்திற்கு,

1975 நவம்பர் 7] [டாக்டர் மு. கருணாநிதி]

ஒரு அனாதை இல்லத்திற்கு அந்தப் பணத்தைக் கொடுக்கலாம். அவர்கள் தான் வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. வசதி படைத்தவர்கள், வருமான வரி கட்டுகிறவர்கள், இந்த முறையில் பயன்படுத்தவும் இடம் இருக்கிறது.

இது ஆளும் கட்சியின் சார்பாக, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்காகக் கொண்டு வரப்படவில்லை என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அதனுடைய தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசியதற்கு மாறாக நண்பர் வடிவேல் பேசினார். உணர்வுகள் இங்கே பேசப்பட்டன என்று பொருள். நண்பர் சீனிவாசன் பேசிய கருத்துக்கு மாறாக டாக்டர் ஹாண்டேயும் மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள், என்றால் உணர்வுகள் இங்கே வெளிப்பட்டு இருக்கின்றன என்று தான் பொருளே அல்லாமல் அதைக் கட்சி சார்பான நிலைமையில் கொள்ளாமல், இது ஒரு நல்ல காரியம், இன்று நிறைவேற்ற இருக்கிறோம் என்ற அளவில், இதை ஏகமனதாக அனைவரும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகை நிருபர்களைப் பற்றி திரு. முனு ஆதி அவர்கள் சொன்னார்கள். அது இதில் வராது. இந்த அரசு பத்திரிகை நிருபர்களுக்கு வீடு வழங்கல், மற்றும் பல சலுகைகளைத் தொடர்ந்து அளித்து வருகிறது. பத்திரிகை நிருபர்கள் ஏற்கனவே இந்த அரசின் மீது திருப்தியாக இருக்கிறார்கள். அவர்களை இப்படிப்பட்ட சிபார்சு மூலம், தங்கள் பக்கம் திருப்பிக் கொள்ள முயற்சிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, அனைவரும் இதனை ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is:

In clause 2, in the proposed new Section 12-B,—

(a) for " for an aggregate period of not less than twelve years", *substitute* the following:—

"for an aggregate period of not less than—

(i) ten years as member of the Legislative Assembly, or